**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.84/2022
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : வினோத் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09th day of August 2023.

09.08.2023

(3ம் எதிரி ஆஜர், 1,2,4,5ம் எதிரி ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகளை தெரியும். நான் 2013ம் வருடத்திலிருந்து முதுகுளத்தூர் TELC கிறித்துவ ஆலயத்தில் உறுப்பினராக இருந்து வருகிறேன். 11.07.2018ம் தேதி பிஷப் தேர்தல் நடைபெறுவது தொடர்பாக அன்றைய தினம் மாலை 04.45 மணியளவில் கூட்டம் நடைபெற்றது. அப்போது அங்கிருந்த ஆலோசனை குழு உறுப்பினர்களான தவசிவளவன், 3ம் எதிரி சுரேஷ்மாணிக்கம், 4ம் எதிரி ஜெபராணி, ரெஜினாமேரி ஆகியோர் புதிதாக ஆட்களை உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்று கூறினார்கள். நான் அதற்கு சட்டவிதிப்படி எதிர்ப்பு தெரிவித்தேன்.

2) அப்போது 1ம் எதிரி கருப்பையாவும், 2ம் எதிரி வேலவன் ஆகியோர் தாயோழி மகனே உனக்கு என்னடா வேலை என்று என்னை பார்த்து கூறினார்கள். அதற்கு நான் உறுப்பினர் நான் தான் கூறுவேன் என்று கூறினேன். 2ம் எதிரி நாங்கள் சொன்னால் கேட்கமாட்டியா என்று கூறினார். அதற்கு நான் உனக்கும் இந்த

தேவாலயத்திற்கும் சம்மந்தம் இல்லை என்று கூறினேன். 3ம் எதிரி இவன் அதிகமாக பேசுகிறான் தாயோழி மகனை அடித்து விரட்டுங்கடா என்று கூறினார். 4ம் எதிரி ஜெபராணியும், 5ம் எதிரி ஆனந்தராஜ்யும் எனது கன்னத்தில் அடித்தார்கள். 3) 1ம் எதிரி கருப்பையா என்னை கன்னத்தில் அடித்தார். உடனே நான் ஏன் என்னை அடித்துக்கொண்டிருக்கிறீர்கள் நான் பேசிக்கொண்டு தானே இருக்கிறேன் என்று கேட்டேன். உடனே 3ம் எதிரியும் சேர்ந்து என்னை அடித்தார். 2ம் எதிரி வேலவன் கீழே கிடந்த கம்பியை எடுத்து எனது நெற்றியில் அடித்தார். அதோடு எனக்கு ஒரு மாதிரி ஆனது. அருகில் இருந்த மங்களேஸ்வரன் சண்டையை தடுத்து நிறுத்தி என்னை முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அப்போது 1 முதல் 5 எதிரிகள் என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறினார்கள். போலிசார் மருத்துவமனைக்கு வந்து என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கிக்கொண்டார்கள். அதை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.